

தமிழீழத்தின் அடிக்கல் **7**

# றெஜி



கட்டன் றெஜி

## 21-4-87

காலை, ஈழமுரசு பத்திரிகையில் ஒட்டிசுட்டான் படை முகாம் தாக்குதலில் படையினர் பலர் பலி. 4 மணி நேரத் தாக்குதல். நாற்பதுக்கு மேற்பட்ட மோட்டார்களை போராளிகள் பயன்படுத்தினர். என்ற செய்தியை வாசித்தேன்.

ஒரு ஏ.கே கூட இல்லாமல் நாங்கள் இதே கட்டடத்தை எமது சொந்த ஆயுதங்களுடன் தாக்கி வெற்றி பெற்ற அந்த நினைவுகள் என்னுள் எழுந்தன.

ஒட்டிசுட்டான் படைமுகாம் தாக்குதல் வெற்றியில் றெஜியின் பங்களிப்பு பெரிது. அவர் வன்னியில் செயற்பட வந்த காலங்களில் ஏதாவது தாக்குதல் நடத்த வேண்டும் எனத் துடியாகத் துடித்தார். அவர் ஒட்டிசுட்டானில் கண் வைத்தார். அன்றிலிருந்து ஒட்டிசுட்டான் தாக்கப் படும்வரை ஓய்வொழிச்சல் இல்லாது வேலைசெய்தார். ஒட்டிசுட்டான் தாக்குதல் பற்றி கதைக்கும் போது பையன்கள் றெஜி அண்ணாவைப் பற்றி கட்டாயம் குறிப்பிடுவார்கள்.

பொதுவாக றெஜி அண்ணாவைச் சந்திக்கும் பையன்கள் பயப் படுவார்கள். ஏனெனில் தன்னைப் போலவே எல்லோரும் ஒழுங்காக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும் தன்மை இவரிடமிருந்தது.

றெஜியின் கட்டுப்பாட்டைப் பற்றி எமது மூத்த உறுப்பினர்கள் கதைக்கும் போது;

முன்பு இயக்கத்தில் சேருவது மிகக் கஷ்டம் ஒவ்வொருவரையும் நீண்ட காலத்தின் பின்னரே முழு நேர உறுப்பினராகச் சேர்த்துக் கொள்வார்கள். பகுதி நேர உறுப்பினராக இருந்த றெஜி முழுநேரமாக உழைக்க சந்தர்ப்பம் தரும்படி கேட்ட போது றெஜியின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. பின்பு, றெஜிக்கு சிங்கப்பூர் போக ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது . றெஜி நிலைமையைச் சொல்லி தன்னை முழு நேரமாகச் சேர்த்துக்கொண்டால் தனது பயணத்தை ரத்துச் செய்வதாக கூறினார். தகப்பன் இல்லாத குடும்பம். வீட்டிற்காக உழைக்க வேண்டிய தேவையும் இருந்தது. எப்போது தன்னை சேர்ப்பதாக சொல்கிறார்களோ அப்போது உடனே தான் வந்து விடுவேன். என்றும் றெஜி சொன்னார். அந்தக் காலத்தில் இயக்கக் கட்டுப்பாடுகளைப் பற்றி கொஞ்சம் கூடுதலாகச் சொல்லி வைப்பது வழக்கம் எனவே அங்கே கண்டபடி படம் பார்க்கக்கூடாது என்றெல்லாம் அறிவுறுத்தப்பட்டது. றெஜி இயக்கக் கட்டுப்பாடு என்பதற்காக ஒரு படம் கூடப் பார்க்காமல் இருந்திருக்கிறார். றெஜி வந்ததும் கட்டுப்பாட்டைப் பற்றிச் சொன்னவர் "றெஜி சும்மா ஒரு கதைக்குச் சொன்னால் நீ அப்படியே இருந்துவிடுவதா?" எனக் கேட்டார் என்று குறிப்பிடுவார்கள்.

சிங்களக் குடியேற்றங்கள் றெஜிக்குச் சினத்தைக் கொடுக்கும் சமாச்சாரம். எமது மண்ணை படிப்படியாக அபகரிக்கும் திட்டத்தை தவிடு பொடியாக்க வேண்டும் என றெஜி அடிக்கடி சொல்வார். இதற்கான நடவடிக்கைகளை இவரே மேற்கொண்டார்.

கொக்கிளாய் தாக்குதலில் காயப்பட்ட நிலையிலும் வீராவேசமான இவரது தாக்குதல்களைக் கண்டு நாம் மெய் சிலிர்த்தோம். புதிய புதிய இராணுவ யுத்திகளைக் கையாள்வதிலும் இவரது கவனம் எப்போது மிருக்கும்.

அன்றொருநாள், ஆமி வந்திருக்கிறார்கள் என்று மக்கள் தகவல் தந்தனர். றெஜி அண்ணாவோடு இன்னும் சில பையன்கள் இருந்தார்கள். பையன்கள் தாங்கள் போய்ப்பார்த்து வருவதாகச் சொன்னார்கள். இவர் "தான் போய்ப்பார்க்கிறேன் பிரச்சினையில்லையென்றால் அதற்குப் பிறகு நான் வந்து உங்களைக் கூட்டிக்கொண்டு போகிறேன்" என்று சொல்லிவிட்டு போனார். பையன்களைப் பலிகொடுக்க விரும்பாமல் ஏதாவது நடந்தாலும் அது தனக்கு நடக்கட்டும் என்று தனது உயிரை பணயம் வைத்து முன்னே சென்றார்.

மறைந்திருந்த இராணுவம் முற்றுகையிட்டது நாங்கள் புலிகள் என்பதை செயலில் நிரூபித்தார் றெஜி. அவர் தன்னை இம்மண்ணுகாக அர்ப்பணித்துக் கொண்டார்.

இன்று கூட கட்டுபாட்டைப் பற்றி கதைக்கும் போது றெஜி அண்ணாவைப் பற்றி எல்லாரும் குறிப்பிடுவார்கள்.

பழைய பழைய உறுப்பினர்களை இழந்த போதிலும் எமது போராட்டம் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து கொண்டே போகிறது. இந்த மூத்த உறுப்பினர்கள் விதைத்த விடுதலை விதைகள் பெரும் விருட்சமாக மாறிவருகின்றன.

■ குட்டி

நன்றி: ஈழமுரசு 05-07-1987

கப்டன் றெஜி அவர்கள் 02-12-85 அன்று மணலாறு பட்டிக் குடியிருப்பில் சிறீலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவடைந்தார்.



# மாவீரர் புகழ் போற்று

மாவீரர் புகழ் போற்று — மனதிலே
ஒளிதீப – விளக்கேற்று
போர் வீரர் புகழ் சாற்று – என்றும்
புவி மீது அவர் புகழ் போற்று

கல்லறைக் கானம் பாடும் தென்றல் காற்று
மில்லரைப் போற்றிடும் புலவர் புகழ் சாற்று
எல்லோர் கண்ணிலும் இருக்கட்டும் நீர் ஊற்று
வல்லவர் அவர் என்று உன் மனதைத் தேற்று.

போராளி அன்புக்கரசன் (ஜிக்கி)
நவம் அறிவுக்கூடம்

